பக்கங்கள் 20

# காலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 08 வெள்ளிக்கிழமை 21.06.2024 அதிர்வு 325

## நடுக்கடலில் மீனவர்கள் மோதலில் ஒருவர் சாவு!

களுத்துறை, பேருவளை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து பல நாள் மீன்பிடிக் கப்பலில் பயணித்த மீனவர்களிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார். 04



### 13 ஆவது திருத்தம், அதிகாரப் பகிர்வு, ஜனாதிபதித் தேர்தல், பொது வேட்பாளர்:

# தமிழ்த் தலைவர்களுடன் ஜெய்சங்கர் நேற்று பேச்சு

**இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர், வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களை ஒருமித்து சந்தித்துக் கலந்துரையாடினார்.**

**நேற்று மாலை கொழும்பிலுள்ள இந்தியன் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறீதரன், இரா.சாணக்கியன், ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., புளொட் கட்சியின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி., தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.**



**வி.விக்னேஸ்வரன் எம்.பி. மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் எம்.பி. ஆகியோர் கலந்துகொண்டனர்.**

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி, அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம், அதிகாரப் பகிர்வு, ஜனாதிபதித் தேர்தல், தமிழ்ப் பொது வேட்பாளர் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டன என்று சந்திப்பில் பங்கேற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்புக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன் எம்.பிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும், இறுதி நேரத்தில் அவர் பங்கேற்கவில்லை. அவர் திடீரெனச் சுகவீனமடைந்துள்ளமையால் மேற்படி சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை.

## தேர்தல்களை ஒத்திவைக்க மொட்டுக் கட்சி இடமளியாது!

### ரணிலுக்கு மஹிந்த எச்சரிக்கை

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளின்படி இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலையும், அடுத்த வருடம் நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்தியே ஆக வேண்டும்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான 04






Too many cooks spoil the soup - என்பார்கள். அப்படியாயிற்று நேற்று மாலை இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கும் தமிழ் எம்பிக்களுக்கும் இடையில் நடந்த சந்திப்பு.

அட்டதிக்கு பாலகர்களாக எட்டுப் பேர் தமிழர் தரப்பில் சந்திப்பில். ஒதுக்கப்பட்ட நேரமோ ஆக 04

# தீர்வுக்கு 13 ஆவது திருத்தம் ஆரம்பப் புள்ளி கூட அல்ல!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஜெய்சங்கரிடம் நேரில் தெரிவிப்பு

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இனப்பிரச் சினைத் தீர்வு தொடர்பாக தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் ஒரு விளக்கக் கடிதத்தை நேற்று மாலை இந்திய வெளிவிவகாரச் அமைச்சர் சுப் பிரமணியம் ஜெய்சங்கரைச் சந்தித்த சமயம் அ வரிடம் கையளித்தது. அதில் உள்ள விடயங்களை அவர் இந்திய அமைச்சருக்குச் சுருக்கமாகத் தமிழில் குறிப்பிட்டார்.**

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வ ராசா கஜேந்திரன் ஒப்பமிட்டு வழங்கியுள்ள இக் கடிதத்தில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:-**

இலங்கைத்தீவில் தமிழருடைய தேசத்தையும் அதன் இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் அங்கீ கரிக்கும் சமஷ்டித் தீர்வை அடைந்து கொள்ள இந்தியா ஒத்துழைக்க வேண்டும்.

பிரித்தானிய காலனித்துவ ஆதிக் கத்தில் இருந்து இலங்கை விடுபட்டதன் பின்னரான 75 வருட காலத்தில், இலங்கை அரசானது பொருளாதார ரீதியாக மட்டுமின்றி அரசியல் ரீதியாக வும் பாதாளத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த 75 வருடங்களாக இலங்கை கடைபிடித்துவரும் கொள்கைகளும், தீர்க்கப்படாமல் நீண்டு செல்லும் இனப் பிரச்சினையுமே இலங்கையின் இன் றைய இந்த வங்குரோத்து நிலைக்குக் காரணமாக அமைந்திருக்கிறது. எனவே, இந்நாட்டின் எதிர்காலம் சிறப்பானதாக இருக்க வேண்டுமெனில், இந்த நாட்டின் கொள்கைகளிலும் ஓர் உண்மையான, தீர்க்கமான மாற்றம் தேவைப்படுகின்றது.

இலங்கையில் இனப்பிரச்சினைக் கான அடிப்படை காரணியாக அமைந்தது இலங்கையிலிருக்கும் “ஒற்றையாட்சி“ அரசமைப்பாகும். குறிப்பாக 36 வருடங் களுக்கு முன்னர் சிறிலங்கா அரசமைப் பில் 13 ஆம் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு முற்றுமுழுதாக நடைமுறை யில் இருக்கும்போதே தமிழ்த் தேசம் மீதான இலங்கை அரசின் இனவழிப்பு நடைபெற்றிருந்தது. அதேவேளை யில் யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் 13 ஆம் திருத் தம் தற்போதும் முழுமையாக நடை முறையிலுள்ள போதும் கூட தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு புரிந்த மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், இனவழிப்புக்குற் றங்கள், வலிந்து காணாமல் ஆக்கப் பட்டமை போன்றவற்றிற்கும் இன்று வரை நீதி கிடைக்கவில்லை. குறிப்பாக, 13 ஆம் திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டு 36 ஆண்டுகள் கடந்துள்ள நிலை யில், அரசியல் ரீதியாக, அன்றைய காலத்துடன் ஒப்பிடுகையில் களச்சூழல் மேலும் மேலும் மோசமாகியே உள்ளது. யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்தும் இனப்பிரச்சினை தீர்க்கப்படா மல் தமிழர் தேசம் மீதான கட்டமைப்புசார் இனவழிப்பும் தீவிரமடைந்து, மீண்டும் இனமுரண்பாடுகள் வலுவடைந்து செல்வதற்கும் அடிப்படைக் காரணம் இதே ஒற்றையாட்சி அரசியல் கட்ட மைப்பேயாகும்.

அரச கட்டமைப்பு ஒற்றையாட்சி அரச மைப்பாக இருக்கும் வரையில், எந்த வொரு வழிமுறையூடாகவும் அர்த்த முள்ள சுயாட்சியை அனுபவிக்கவோ அல்லது சுயநிர்ணய உரிமையை உரியமுறையில் பிரயோகிக்கவோ முடியாதவாறு இருப்பதனால், அந்த ஒற்றையாட்சி முறைமைக்கு உட்பட்ட 13 ஆம் திருத்தச்சட்டம் அறிமுகப்படுப் படுத்தப்பட்ட காலத்தில் இருந்தே தமி ழர் தரப்பு முழுமையாக அதனை நிரா கரித்து வந்துள்ளது. இந்த 13ஆம் திருத் தம் அறிமுகப்படுத்தப்பட்ட காலத் தில் இருந்து, அதன் அதிகாரங்கள் குறித்து சிறிலங்காவின் மீயுயர் நீதி மன்றுகளில் ஏறத்தாழ 30 வழக்குகள் விசாரிக்கப்பட்டு அதன் தீர்ப்புகள் அனைத் தும், அரச கட்டமைப்பு ஒற்றையாட்சியாக இருக்கும் வரைக்கும், அனைத்து அதி காரங்களும் , கொழும்பை மையப்படுத் திய மத்திய அரசிடமே இருக்கும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளன. அதிகாரப் பகிர்வுக்கு எதிராகவே நீதி மன்றங்கள் தீர்ப்புகளை அளித்திருக் கிறன.

இந்நிலையிலேயே, தமிழர் இனப் பிரச்சினைக்குத்தீர்வாக, 13ஆம் திருத்த சட்டத்தின் முழுமையான அமுலாக் கத்தை இந்தியா கோரி வருகின்றது. ஆனால், 13 ஆம் திருத்தத்தின் சரத்து களின் அமுலாக்கம் குறித்து எப்போ தெல்லாம் சிறிலங்காவின் மீயுயர் நீதி மன்றை நாடிய போதெல்லாம், அது மேற்குறிப்பிட்டவாறே தீர்ப்புகளை அளித்திருக்கிறது. அரசமைப்புக் குறித் தான பொருள்கோடல் செய்து இறுதி முடிவுகளை எடுக்கும் அதிஉயர் பீடமாக சிறிலங்காவின் உச்ச நீதிமன்று இருக் கின்றது. அந்த உச்ச நீதிமன்று 13 ஆம் திருத்த அதிகாரங்கள் குறித்து இதுவ ரைகாலமும் வழங்கிய தீர்ப்புக்களின் அடிப்படையிலும், 13 ஆம் திருத்தமா னது, சிறிலங்காவின் சட்டவரம்புகளின் பிரகாரம் அது “முழுமையாக“ அமுல்படுத் தப்பட்டே உள்ளது.

இலங்கையில் இனநல்லிணக்கத் தினை ஏற்படுத்தல் என்னும் பெயரில் அனைத்து இனங்களும் ஏற்றுக் கொள் ளக்கூடிய புதிய அரசியல் யாப்பிற்கான வரைவை உருவாக்கும் சட்டபூர்வமான நடவடிக்கைகள் கடந்த 2016 மார்ச் இல் ஆரம்பமாகி 2019 ஜனவரியில் நிறை வடைந்தது. அவ்வாறு தயாரிக்கப்பட்ட அரசியல் யாப்பு வரைவானது தற் போது இருப்பதனைவிடவும் மிகவும் இறுக்கமான ஒற்றையாட்சி கட்டமைப் புக்கான வரைவாகும். அரச கட்ட மைப்பு ஒற்றையாட்சி அரசமைப்பாக இருக்கும் வரையில் அர்த்தமுள்ள சுயாட்சியை அனுபவிக்கவோ அல்லது சுயநிர்ணய உரிமையை உரியமுறை யில் பிரயோகிக்கவோ முடியாது. இந்த காரணிகளின் அடிப்படையிலே எமது அமைப்பானது, 13 ஆம் திருத்தினைத் தீர்வுக்கான ஆரம்ப புள்ளியாகவேனும் கருத்திலெடுக்கக் கூடாதெனும் நிலைப் பாட்டினை ஆரம்பம் முதல் உறுதியாக வுள்ளது.

அத்தோடு, இனப்பிரச்சினைத் தீர் வுக்குரிய எந்தவொரு பேச்சுவார்த்தை யும், நேர்மையானதாகவும் தீர்க்கமான தாகவும் இருக்கவேண்டுமெனில், அரச மைப்பு மூலம், நாட்டின் ஐக்கியத்தை பேணிக்கொள்ளும் அதேவேளை, ஒற்றையாட்சியைக் கடந்து சமஷ்டி முறையைக் கருத்தில் எடுப்பதன் மூலமே இனப்பிரச்சினைக்கான தீர்வை அடைய முடியும் என்பதை சிங்கள தேசத்தின் தலைவர்கள், தமது மக்களுக்கு நேர்மையாகவும் வெளிப்படையாகவும் அறிவிக்கவேண்டும் என்பதையும் எமது அமைப்பு வலியுறுத்தி நிற்கின்றது.

1985 ஆம் ஆண்டு சிறிலங்கா அரசுக்கும் தமிழர் தரப்புக்கும் இந் தியாவின் ஆசீர்வாதத்தோடும் அனு சரணையோடும் நடந்த பேச்சுக்களில் தமிழர் தரப்பில் அனைவரும் இணைந்து ஒருமித்த குரலில் முன்வைத்த திம்புக் கோட்பாடுகள் தீர்வுக்கான அடிப் படைகளாக இருக்க வேண்டுமென எமது அமைப்பு மிக திடமாக நம்புகிறது.

பொருளாதாரம் பாதாளத்தில் வீழ்ந் துள்ள இலங்கை அரசானது, தனக் குரிய தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்ய உலக நாடுகளில் தங்கியுள்ள

தொடர்ச்சி ▼

# தீர்வுக்கு 13 ஆவது திருத்தம் ஆரம்பப் புள்ளி கூட அல்ல!

தொடர்ச்சி▲

நிலையில், வேறெந்த நாடுகளை விடவும் இந்தியாவிற்கு சிறிலங்கா மீதான பிடி மிகவும் வலிதானது. இக்கட்டான நிலையில் இருந்து சிறீலங்காவை மீட்பதற்காக தனது நடவடிக்கைகள் மூலம் சிங்கள மக்களின் மரியாதையும் இந்தியா வென்றிருக்கின்ற நிலையை உருவாக்கியிருக்கிறது. இந்நிலையில், ஒற்றையாட்சிக்குட்பட்ட எந்தவொரு தீர்வையும் தமிழர்கள் நிராகரிப்பதை இந்தியா ஏற்று, தமிழரின் அந்த நிலைப்பாட்டுக்கு உறுதுணையாக நிற்பதோடு, தமிழர்தேசத்தை அங்கீகரித்து அதைப் பாதுகாக்கின்ற வகையிலானதும், தமிழர்கள் ஒருபோதும் இழக்கமுடியாத தங்களது சுயநிர்ணய உரிமையை, அனுபவிக்க கூடியதுமான ஒரு சமஷ்டித் தீர்வுக்கான தன் ஆதரவை வெளிப்படுத்தவேண்டும் எனவும் எமது அமைப்பு இந்தியாவை தீர்க்கமாக வேண்டிக்கொள்கிறது.

மேலும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குள் கடந்த 12 ஆண்டுகளாக முடக்கப்பட்டுள்ள பொறுப்புக்கூறல் விவகாரத்தினை அங்கிருந்து சர்வ தேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அல்லது சர்வதேச நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்வதற்கு இந்தியா முன்னின்று நடவடிக்கை எடுக்க வேண்டுமென வும் –

போரினால் அழிவடைந்த வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் கடந்த 15 ஆண்டுகளாக இலங்கை அரசினால் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தினை போரால் பாதிக்கப் பட்ட பிராந்தியமாகப் பிரகடனம் செய்யவும் இப்பிரதேச அபிவிருத்திக் கென சர்தேச நிதிஉதவியைப் பெற்றுத் தரவும் நடவடிக்கை எடுக்க வேண்டு மெனவும் –

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் விசேட அறிக்கையாளர் ஒருவரை இலங்கையின் பெயர் குறித்து வடக்கு, கிழக்கு நிலைமைகள் தொடர்பான அறிக்கையிடலுக்காக நியமிக்க இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டு மெனவும் –

அத்துடன் இலங்கையின் கடற்பரப்பினுள் எல்லதாண்டி நுழையும் இந்திய மீனவர்களது இழுவைப்படகுகளால் தமிழ்த் தேசத்து மீனவர்களது வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்படுகின்றது. இவ்விடயத்தில் இந்திய அரசு உடன் நடவடிக்கை எடுத்து தமிழ்த் தேசத்து மீனவர்களது வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டு மெனவும் கோருகின்றோம்.

இறுதியாக, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு நலன்களை உறுதிப்படுத்திக் கொள்வதில் தமிழ்த் தேசமும் எமது அரசியல் இயக்கமும் எப்போதும் உறுதுணையாக இருக்கும் என்பதனையும் இங்கு மீளவும் வெளிப்படுத்திநிற்கின்றோம். – என்று தெரிவித்துள்ளது.



# இந்திய வம்சாவளித் தமிழ்த் தலைவர்களை சந்தித்தார் இந்திய வெளிவிவகார அமைச்சர்

இந்திய வம்சாவளித் தமிழர்கள் தொடர்பாக இலங்கை – இந்திய வளர்ச்சிக் கூட்டாண்மை மற்றும் கூடுதல் ஒத்துழைப்பு குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் மற்றும் இந்திய வம்சாவளி தமிழ் தலைவர்களுக்கிடையிலான சந்திப் பின்போது அவதானம் செலுத்தப் பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் நேற்று இலங்கை வந்திருந்த நிலையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

இதில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் சார்பில் அதன் பிரதித் தலைவர் வே.இராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.வேலுகுமார் மற்றும் எம்.உதயகுமார் ஆகியோரும், இலங்கைத் தொழிலாளர் காங்ரஸ் சார்பில் அதன் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இ.தொ.கா. பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி இராமேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும், கல்வி இராஜங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் வடிவேல் சுரேஷ் எம்.பி. ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

மேற்படி சந்திப்பின்போது நரேந்திர மோடி மூன்றாவது முறையாகவும் இந்தியப் பிரதமராகப் பதவியேற்றமைக்கு வாழ்த்துத் தெரிவித்த தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர் வே.இராதாகிருஷ்ணன் எம்.பி., இந்தியா எப்போதும் பலம் மிக்கதாக இருக்க வேண்டும் என்றும், அவ்வாறிருந்தால்தான் இலங்கையிலுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்றும் ஜெய்சங்கரிடம் சுட்டிக்காட்டினார்.

சீதையம்மன் ஆலயம் தொடர்பில் இதன்போது அவதானம் செலுத்தப் பட்டது. இலங்கையில் தேர்தல்கள் நிறைவடைந்ததன் பின்னர் அதனை அபிவிருத்தி செய்வதற்கான வழி வகைகள் குறித்து அவதானம் செலுத்துமாறு உயர்ஸ்தானிகருக்கு ஜெய்சங்கர் ஆலோசனை வழங்கினார்.

மேலும், தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் 4 ஆயிரம் வீடுகளின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்யுமாறும், அதன் பின்னர் மேலும் பல அபிவிருத்தி திட்டங்களை மலையகத்தில் முன்னெடுப்பது குறித்து அவதானம் செலுத்தப்படும் என்றும் ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

# ‘உறுமய’ திட்டத்தினை விரைவுபடுத்த நாடளாவிய ரீதியில் நடமாடும் சேவை





நாட்டில் 20 லட்சம் பேருக்கு காணி உறுதிகளை வழங்குவதற்கான ‘உறுமய’ தேசிய வேலைத்திட்டத்தினை துரிதப்படுத்தும் வகையில், இம்மாதம் 26 ஸ்ரீ 30 ஆம் திகதி வரையில் நாடளாவிய ரீதியில் நடமாடும் சேவையொன்றை நடத்த ஜனாதிபதி அலுவலகம் தீர்மானித்துள்ளது.

அதன்படி காணி உறுதிகளை வழங்குவதற்கான சகல துறைசார் அதிகாரிகளையும் கிராமங்களுக்கு அனுப்பி அவர்கள் ஊடாக விரைவாக காணி உறுதிகளை பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்துள்ளோம் என ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் சந்திரா ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார், இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“உறுமய திட்டத்தின் கீழ் பெருமளவான காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த வேலைத்திட்டத்தை விரைவுபடுத்தும் நோக்கில் நடமாடும் சேவையொன்றையும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி இம்மாதம் 26 – 30 திகதி வரையில் இந்த நடமாடும் சேவை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்போது காணி உறுதிகளை மக்களுக்கு வழங்குதற்காக சகல அதிகாரிகளும் நடமாடும் சேவையில் பங்கெடுப்பர். உறுதியை பெற்றுக்கொள்ள வருவோர் அவர்களின் பழைய உறுதிகள் அல்லது அனுமதி பத்திரங்களை அதிகாரிகளிடத்தில் ஒப்படைப்பதை மாத்திரமே செய்ய வேண்டும்.

ஏனைய அளவையியல் பணிகள், பதிவுச் செயற்பாடுகள் என்பவற்றை அதிகாரிகள் முன்னெடுப்பர். இந்த சேவையுடன் பதிவாளர் திணைக்களம், அளவையியல் திணைக்களம், பிரதேச செயலகம், மாவட்டச் செயலக அதிகாரிகளும் கலந்துகொள்வர். இதற்காக சிறிதும் பணம் அறவிடப்படாது.” – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### நடுக்கடலில்...

அந்தப் படகில் 6 மீனவர்கள் பயணித்த நிலையில் அவர்களிடையேயான மோதல் நடுக்கடலில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஏனைய மீனவர்களும் காயமடைந்தனர் என்று பேருவளை கடற்றொழில் பரிசோதகர் அலுவலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கப்பலின் உரிமையாளர் பேருவளை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்தவரின் சடலம் பேருவளை மீன்பிடித் துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.ய

மோதலில் மாகல்கந்த பகுதியைச் சேர்ந்த நபரே உயிரிழந்துள்ளார்.

### தேர்தல்களை...

மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“ஜனாதிபதியின் பதவிக் காலம் 5 வருடங்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிக் காலமும் 5 வருடங்கள். எனவே, அரசமைப்பில் உள்ள ஒருசில ஓட்டைகளைக் காரணம் காட்டி மக்கள் ஆணை வழங்கும் தேர்தல்களுடன் எவரும் விளையாடக்கூடாது. தேர்தல்களை உரிய காலத்தில் நடத்த வேண்டும்.

இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தியே தீர வேண்டும். ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க மொட்டுக் கட்சி அனுமதி வழங்காது.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி ரணிலுக்கு அழுத்தம் எதனையும் வழங்கவில்லை. ஊடகங்களில் வரும் செய்திகள் எல்லாம் உண்மை இல்லை. இன்று பெரும்பாலான ஊடகங்கள் போலிச் செய்திகளையே வெளியிடுகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளின்படி இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலையும், அடுத்த வருடம் நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்தியே ஆக வேண்டும். ஜனாதிபதி மேற்படி வாக்குறுதிகளை மீறமாட்டார் என்று நம்புகின்றோம்.” – என்றார்.

### இரகசியம் பரகசியம்...

வெறும் 30 நிமிடங்கள் மட்டுமே. ஆளாளுக்கு இரண்டு, இரண்டரை நிமிடங்கள் மிகச் சுருக்கமாகப் பேசுங்கள், மிகுதி நேரம் இந்திய வெளியுறவு அமைச்சர் பதில் தருவார் என்று கூறித்தான் பேச்சுக்கு அனுப்பி வைத்தார்கள்.

ஆனால் அமைச்சர் ஜெய்சங்கரை பேச விடாது நம்மவர்கள் நீட்டி முழக்கியமைதான் நடந்தேறியது. பேச வந்த ஜெய்சங்கர் பச்சைத் தமிழர். அதனால் நம்மவர் எல்லோரும் ஏறி இருந்து முழங்காத குறைதான். ஆங்கிலத்தில் உரையாட வேண்டியிருந்திருந்தால் நேரம் மிஞ்சி இருக்கும்.

ஆளாளுக்கு இரண்டு, மூன்று நிமிடங்கள்தான் பேசினார்கள் என்பது உண்மைதான். ஆனால் தமிழரசுத் தலைவர் மாவை வழமை போல ஏழரை நிமிடங்கள் தமிழில் பேசி, அது தமிழில் ஜெய்சங்கருக்கு விளங்காது என்று எண்ணியோ, என்னவோ சுமார் இரண்டு நிமிட நேரம் தன் ஆங்கில மொழி பெயர்ப்புத் திறமையைக் காட்டும் விதத்தில் தாம் தமிழில் கூறியவற்றை ஆங்கிலத்திலும் கூறுவதாக நினைத்து புலம்பித் தள்ளி விட்டார்.

பிறகு என்ன? ஜெய்சங்கருக்கு பேச நேரம் கிடைக்கவேயில்லை. “உங்கள் கருத்துக்களை செவிமடுத்துள்ளேன். ஆவன செய்கிறேன். போய் வாருங்கள்!” – என வழி அனுப்பி வைத்தார் அவர்.

பொது வேட்பாளர் திட்டத்தைத் தாம் ஆதரிக்கிறார் என சிறிதரன் கூறினார். அது பற்றி மிகச் சுருக்கமாக நீதியரசர் விக்னேஸ்வரனும் ஆங்கிலத்தில் தெளிவுபடுத்தினார்.

அப்போது குறிப்பிட்ட ஜெய்சங்கர் “Are you all serious on this?” – என்று ஆச்சரியமாகக் கேட்டார்.

அப்போது இடையில் புகுந்த சுமந்திரன், இது விடயத்தில் மாறுபாடான – வித்தியாசமான – கருத்துக்கள், நிலைப்பாடுகள் இருக்கின்றன என்று தெளிவுபடுத்தினார்.

செல்வராஜா கஜேந்திரன் தமது கட்சியின் சார்பிலான நிலைப்பாட்டை எழுத்தில் எழுதி வந்து வாசித்தமையுடன் அது தொடர்பான கடிதத்தையும் கையளித்தார்.

செல்வமும் சித்தரும் தமிழர்களின் காணிகள் சூறையாடப்படுவது பற்றிக் குறிப்பிட்டனர்.

சாணக்கியன் ஆங்கிலத்தில், இந்திய – இலங்கை இணைப்பு முயற்சியை சிலாகித்து, ஆயினும் அதில் பிரதான பாத்திரம் வடக்கு கிழக்குத் தமிழர்கள் தான் என்பதை நினைவூட்டிய போது தலை அசைத்து அதை ஆமோதித்து ஏற்றார் ஜெய்சங்கர்.

நேற்றைய கூட்டத்துக்குக் கடைசி நேரத்தில் பெரும் இழுபறிக்கு மத்தியில்தான் சாணக்கியன் அழைக்கப்பட்டார். சுகவீனம் காரணமாக சம்பந்தன் பங்குபற்றவில்லை. சாணக்கியன் பங்குபற்றியமையால், ‘தமிழர் அணி – தனி வடக்கு அணியே!’ – என்ற குற்றச்சாட்டு அடிபட்டு போயிற்று.

நேற்று பலர் இந்திய ஹவுஸுக்கு வந்து ஜெய்சங்கரை சந்தித்துச் சென்றனர். அவர்களில் ஒருவர் – பஸில் ராஜபக்ஷ. ஆரவாரமின்றி அந்தச் சந்திப்பு நடந்தமையின் பின்னால் ஏதோ ஒரு சூத்திரம் பொதிந்து கிடப்பதாகவே என் உள்மனம் சொல்லுகின்றது...!



# இந்திய வெளிவிவகார அமைச்சர் எதிர்க்கட்சித் தலைவருடன் சந்திப்பு

இந்திய வெளிவிவகார எஸ்.ஜெய்சங்கர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று கொழும்பில் இடம்பெற்றது.

இதன்போது, அண்டைய நாடான இந்தியாவிடம் இருந்து கிடைத்த உதவிகள் மற்றும் ஒத்தாசைகளுக்கு எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நன்றி தெரிவித்துள்ளார்.

அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையே பல நூற்றாண்டுகளாக நிலவி-வரும் நட்புறவு, ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்திலும் அவ்வாறே பேணப்படும் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் வீடமைப்புத் திட்டங்களுக்கும், சுவசெரிய அம்புலன்ஸ் சேவைக்கும் இந்திய அரசாங்கம் வழங்கிய பங்களிப்பை என்றும் மறக்க முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார். இந்திய அரசாங்கத்தின் கல்விக் கொள்கை தொடர்பில் கருத்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இந்தியாவைப் போன்று இலங்கையிலும் ஸ்மார்ட் கல்வியையும், புதிய உலகிற்கு ஏற்ற கல்விக் கொள்கையையும் உருவாக்குவதே தமது நோக்கமாகும் என்றும் தெரிவித்தார்.





அத்துடன், மீண்டும் ஒருமுறை இந்தியப் பிரதமராகப் பதவியேற்றுள்ள நரேந்திர மோடிக்கு வாழ்த்துகளைத் தெரிவிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதன்போது தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு இரு நாடுகளுக்கும் இடையே இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதில் ஆற்றிய பங்களிப்பு குறித்து இந்தியப் பிர-தமர் நரேந்திர மோடி மிகவும் மகிழ்ச்சியடைகின்றார் எனவும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நெருங்கிய உறவைப் பேணத் தயாராக இருப்பதாகவும், நட்பை மேலும் வளர்த்துக் கொள்ள எதிர்பார்க்கின்றோம் எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில், ஐக்கிய மக்கள் சக்தியையும் ஐக்கிய மக்கள் கூட்டணியையும் பிரதிநிதித்துவப்படுத்தி பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், எரான் விக்கிரமரத்ன, பழனி திகாம்பரம், ரவூப் ஹகீம், நிரோஷன் பெரேரா மற்றும் வீ இராதாகிருஷ்ணன் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# எங்கே நீதி?

பொறுப்பற்ற நீதித்துறையின் போக்கு இலங்கை அரசியலில் நெருப்பெடுக்க வைத்திருக்கின்றமை கண்கூடு.

நாட்டின் ஆட்சிக் கட்டமைப்பின் மூன்று பிரதான தூண்களான நிறைவேற்றதிகாரம், சட்டவாக்கல் துறையான நாடாளுமன்றம், நீதித்துறை ஆகிய மூன்றும் ஒன்றுடன் ஒன்று முரண்பட்டு, சிக்குபட்டு, குழம்பும் ஒரு குழப்பகரமான சூழ்நிலை தென்பட்டு வருகின்றது.

நிறைவேற்றதிகாரமும் சட்டவாக்கல்துறையும் அரசியல்வாதிகளினால் கையாளப்படுபவை. அவை முந்திப் பிந்தி இருக்கலாம்.

ஆனால் நீதித்துறையோ சட்டத்துறையில் கற்றறிந்த நீதியரசர்கள் முதற்கொண்டு சட்ட அறிஞர்களினால் இயக்கப்படுவது. மிகவும் பொறுப்புடனும் கண்ணியத்துடனும் கவனத்துடனும் நீதித்துறை செயல்பட வேண்டும்.

'நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரமன்றி, நிலை நாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்' என்பது நீதித்துறையில் மகாவாசகம். கற்றறிந்த நீதித்துறையினருக்கு அந்த வாசகத்தின் ஆழமும் அர்த்தமும் புரியும். நீதி நிலைநாட்டப்படுவது போல காட்டுவதும் அவர்களின் பணி என்பதை நினைவூட்ட விரும்புகிறோம்.

நாட்டின் மேனிலை நீதிமன்றங்களான உயர்நீதிமன்றத்துக்கும், மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கும் நீதியரசர்களை நியமிக்கும் பொறுப்பு அரசமைப்பு மூலம் நிறைவேற்றதிகாரத்தை வைத்திருக்கும் ஜனாதிபதிக்கும், அரசமைப்பு கவுன்சிலுக்கும் வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியையும் அரசமைப்பு கவுன்சிலையும் பொறுத்தவரை நாட்டின் அரசமைப்பு மூலம் அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள கடப்பாடு - பொறுப்பு - கடமை - அது.

ஜனாதிபதிக்கும் அரசமைப்பு கவுன்சிலுக்கும் அரசமைப்பு மூலம் வழங்கப்பட்ட கடப்பாட்டை - பொறுப்பை - தன்னிச்சைப்படி கால வரையறையின்றி மாதக்கணக்குகள் தாண்டி, உயர்நீதிமன்றம் தடுக்க முடியுமா? அப்படித் தடுப்பது அரசமைப்பின் சரத்துக்களின் செயற்பாட்டுக்கு உயர் நீதிமன்றம் தடை விதிக்கும் விவகாரமாகி விடாதா? அரசமைப்பின் செயற்பாட்டை அப்படி நீண்ட காலம் தடுக்கும் உரித்து உயர் நீதிமன்றுக்கு யார் வழங்கினார்கள்? - என்ற கேள்விகள் எல்லாம் எழுகின்றன.

உயர்நீதிமன்ற நீதியரசர் நியமனத்தில் யாரோ ஒருவருக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக மனு செய்யப்பட்டிருப்பதின் அடிப்படையில், அந்த மனுவை விசாரித்து முடிவெடுக்கும் வரை உயர் நீதிமன்றத்துக்கு நீதியரசர்களை ஜனாதிபதியோ அரசமைப்புக் கவுன்சிலோ நியமிக்க கூடாது என்று தடைவிதித்து, அதனைப் பல மாதங்களுக்கு தொடரச் செய்வது, அரசமைப்பின் ஒரு பகுதியின் செயற்பாட்டுக்கு நீண்ட பல மாதங்களாக உயர் நீதிமன்றம் தடை விதிப்பதற்கு ஒப்பாகும்.

இப்படி நாட்டின் முக்கிய பதவி நிலைக்கு உயர்தரப்பினரை நியமிக்கும் நிறைவேற்றதிகாரத்தினதும் அரசமைப்புக் கவுன்ஸிலினதும் அத்தியாவசியக் கடமைப்பாட்டை, உயர்நீதிமன்றமே பொறுப்பின்றித் தடுத்து, அரசமைப்பின் செயற்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கின்றது. இந்தப் பின்புலத்தில், மறுபக்கம் அந்த நீதித்துறைக்கு எதிராக நிறைவேற்றதிகாரமும் சட்டவாக்கல் துறையும் முறுகல் நிலையைக் கடைப்பிடிப்பதில் என்ன தவறு என்ற கேள்வியும் எழுகின்றது.

யதார்த்தக் களப்புற நிலையே புரியாது, கனவுலகில் சஞ்சரித்தபடி நாட்டை ஆளவோ, நிர்வகிக்கவோ முடியாது. சட்ட அமுலாக்கத்திலும் யதார்த்தத்தைப் புரியாமல் மனவுலக மருட்சியில் அதை முன்னெடுக்க முடியாது. நீதித்துறையினர் இதைப் புரிந்து கொள்ள வேண்டும். வெறும் சட்டத்தின் பெயரால் உத்தரவுகளை பிறப்பித்து, அதற்கு தமக்கு சட்டரீதியாக அதிகாரம் உண்டு என சட்டவாதம் பிளப்பதில் அர்த்தமில்லை. அந்த உத்தரவுகளின் விளைவுகள், பெறுபேறுகள் எத்தகையன என்பதையும் அத்தகைய உத்தரவுகளைப் பிறப்பிக்க முன்னர் நீதித்துறை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நீதியரசர்களை நியமிப்பது ஜனாதிபதியினதும் அரசமைப்புக் கவுன்ஸிலினதும் அரசமைப்பு ரீதியான கடப்பாடு. பொறுப்பு. அதை மாத கணக்குகள் தாண்டித் தடுக்கு உத்தரவு பிறப்பித்து, அரசமைப்பு நடைமுறையாக்கத்துக்கு முறையற்ற விதத்தில் தடை போடுவது, நீதி நடவடிக்கையாக இருக்க முடியாது.



# இந்திய – இலங்கை கூட்டு அபிவிருத்தி திட்டங்களைத் துரிதப்படுத்துவதில் கவனம்

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான எரிசக்தித் துறை தொடர்பான கூட்டுத் திட்டங்களை துரிதப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று சந்தித்தார். இந்தச் சந்திப்பில் இடம்பெற்ற இரு தரப்புக் கலந்துரையாடலில் இந்த விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

எரிசக்தி இணைப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையின் மேம்பாடு, எல்.என்.ஜி விநியோகம், இரு நாடுகளுக்கு இடையே அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள எரிபொருள் விநியோகக் குழாய், எரிபொருள், எரிவாயு ஆய்வுத் திட்டங்கள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

சம்பூர் சூரிய மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் 2024ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையில் பால் உற்பத்தியை ஊக்குவிக்க, இந்திய அரசின் ஆதரவுடன் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் செயற்றிறன் மற்றும் உர உற்பத்தி தொடர்பான திட்டங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

திருகோணமலையின் அபிவிருத்திக்காகவும், காங்கேசன்துறை துறைமுகத்தின் விரிவாக்கத்துக்காகவும் இந்திய அரசின் அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இந்திய அரசின் அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் யாழ். விமான நிலையம் மற்றும் இரத்மலான விமான நிலையம் ஆகியவற்றின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், இலங்கையில் டிஜிட்டல் மயமாக்கலின் முதற்படியாக, இலங்கைக்கான தனித்துவமான டிஜிட்டல் அடையாள அட்டைத் திட்டத்தை துரிதப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து, விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, விவசாயம், தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர, மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, தேசிய பாதுகாப்பு மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா உள்ளிட்ட இந்தியத் தூதுக்குழுவினரும் கலந்துகொண்டனர்.

# மலையகப் பிரதேச பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும்

## கல்வி அமைச்சர் தகவல்

மலையகப் பிரதேசங்களில் உள்ள பட்டதாரிகளை ஆசிரியர் நியமனங்களுக்காக உள்வாங்குவது தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

மலையகப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்கு ஆசிரிய உதவியாளராக உள்வாங்கப்படவுள்ளவர்கள் தொடர்பான வர்த்தமானி குறித்து நாடாளுமன்றில் நேற்று வாய்மொழி கேள்வி நேரத்தில் எழுப்பப்பட்ட வினாவிற்கு பதில் வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வாறு ஆசிரிய உதவியாளர்களின் உள்ளீர்ப்பானது மத்திய அரசாங்கத்தின் கீழா அல்லது மாகாண சபைகளின் கீழா இடம்பெறுகிறது என கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதில் வழங்கிய அமைச்சர் –

“ஊவா, மத்திய, தென், சபரகமுவ மற்றும் மேல் மாகாணங்களில் நிலவும் தமிழ் மொழிமூல பாடசாலைகளின் ஆசிரியர் பற்றா நிலையை நிவர்த்தி செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைகள் மத்திய அரசாங்கத்தின் ஊடாகவே மேற்கொள்ளப்படுகிறது.



ஊவா, சபரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் இருக்கின்ற பட்டதாரிகள் குறித்த விபரங்களைச் சேகரித்து வருகிறோம்.

அவர்கள் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்க அவதானம் செலுத்தி இருக்கிறோம்.” – என்றார்.

# ஜனாதிபதி ரணிலின் மன்னார் விஜயத்தால் மக்களுக்கு எந்தப் பயனும் கிட்டவில்லை!

## தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் சிவகரன் தெரிவிப்பு




(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மன்னார் விஜயத்தால் மக்களுக்கு எவ்வித பயனும் இல்லை. காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மண் அகழ்வு குறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. அரசியல் நலன் சார்ந்தே இந்த விஜயம் அமைந்துள்ளது என தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தியப் பிரதமரின் இலங்கை வருகையை ஒட்டி தனது அரசியல் இருப்பை நிலை நிறுத்திக் கொள்ளும் விவகாரத்திற்காக மன்னாரிற்கான விஜயத்தை ஜனாதிபதி மேற்கொண்டுள்ளார்.

காற்றாலை உற்பத்தியை இந்தியாவிற்கு வழங்குகின்ற விவகாரம் தொடர்பாகவும் தலைமன்னாரில் இருந்து இராமேஸ்வரத்திற்கான தரைவழிப் பாதை அமைப்பது சம்பந்தமாகவும் உரையாடிச் சென்றுள்ளார்.

அவருடைய வருகை அரசியல் ரீதியாக நிறைவேறி இருந்தாலும் மன்னார் மக்களுக்கு எவ்வித பலனும் கிடைத்ததாக தெரியவில்லை.

இங்குள்ள காணி விடுவிப்பு குறித்து எந்தவித முயற்சிகளும் எடுக்கப்படவில்லை.

கலந்து கொண்டிருந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட இவ்விடயத்தை வலிமையாக வலியுறுத்தவும் இல்லை. அவர்களும் ஆளும் கட்சி போல் ஜனாதிபதியின் நிகழ்வில் ஆசுவாசமாக கலந்து கொண்டு சென்றுள்ளனர்.

மன்னாரில் இனி புதிதாக குடியேறுவதற்கு எவ்வித காணியும் இல்லை.

வன இலாகா மற்றும் பறவைகள் சரணாலயம் என்ற போர்வையில் காடுகளைப் பாதுகாத்தல், விலங்குகளைப் பாதுகாத்தல், கரையோரத்தைப் பாதுகாத்தல் என்ற போர்வையில் சகல இடங்களும் வர்த்தமானி அறிவிப்புக்கு உட்படுத்தப்பட்டு, மன்னாரில் மக்கள் குடியேறாத வகையில், ஒரு துண்டு நிலம் இல்லாத நிலையில், உத்தரவாதத்தை அரசு மீறிவிட்டது. – எனத் தெரிவித்தார்.

# நாடு திரும்பினார் ஜெய்சங்கர்



உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்றுக் காலை இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் நேற்று இரவு நாடு திரும்பினார்.

ஒருநாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்திருந்த ஜெய்சங்கர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வடக்கு – கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் மலையகத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் உள்ளிட்ட பல தரப்பினரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் நேற்று இலங்கை வந்து சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.







# யாழ் பல்கலையின் பிரதான வாயிலை மூடி ஊழியர்கள் சத்தியாகிரகப் போராட்டத்தில்

யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் பல்கலைக்கழக பிரதான வாயிலை மூடி தொடர் சத்தியாகிரகப் போராட்டம் ஒன்றை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

சம்பள நிலுவை மற்றும் சம்பள அதிகரிப்பினை வலியுறுத்தி 49 ஆவது நாளாக அகில இலங்கை ரீதியாக அனைத்து பல்கலைக் கழகங்களிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது

இந் நிலையில் நேற்று முன்தினம் முதல் ஏனைய பல்கலைக் கழகங்களில் சத்தியாக்கிரக போராட்டம் ஆரம்பிக் கப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து யாழ் பல்கலைக் கழகத்திலும் நேற்று முதல் சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது..

இதன் பொழுது யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் தங்கராஜா தமது கோரிக்கைகள் மற்றும் போராட்டம் தொடர்பிலும் கருத்து வெளியிட்டிருந்தார். அவர் கூறியவை வருமாறு:-

12,000 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் போராட்டத் தில் ஈடுபட்டு வருகின்றனர். அரசு பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவோ, உயர்கல்வி அமைச்சோ எமது பிரச்சினையைக் கவனத்திற் கொள்ளவில்லை. 2016 ஆம் ஆண்டு முதல் நாம் ஏமாற்றப்பட்டு வருகின்றோம்.

சம்பள அதிகரிப்பையும் சம்பள நிலுவையையும் வலியுறுத் திப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு எமக்கு வாக்குறுதிகளை வழங்கி தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றது. 49 ஆவது நாளாகவும் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

இந்த போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர அரசுக்கு விருப்பமில்லை. இந்நிலையில் உண்ணாவிரத மற்றும் சாத் வீக போராட்டத்தினை அனைத்து பல்கலைக்கழங்களிலும் முன்னெடுத்துள்ளோம்.

ஆகவே எமது சம்பள நிலுவை மற்றும் அதிகரிப்பு சாத் தியமாகின்ற பொழுது பல்கலைக்கழக கல்வி நடவடிக் கைகளை முன்னெடுப்போம். - என அவர் மேலும் தெரி வித்தார்.






















# கிழக்குப் பல்கலையில் 2 ஆவது நாள் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு – வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் நேற்று முன் தினம் புதன்கிழமை ஆரம் பித்த தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தின் இரண்டாம் நாளான நேற்றுக் வியாழக் கிழமை தொடர்ந்தது.

வளாகத்தின் முன்பாக பிர தான நுழைவாயிலின் இரு மருங் கிலும் சத்தியாக்கிரகப் போராட் டத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ள னர்.









# 20 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய மரங்களை வவுனியாப் பொலிஸார் கைப்பற்றினர்

(கே.வசந்தன்)

வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் சட்டவிரோதமாக வெட்டப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த இருபது லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய மரக்குற்றிகள் மீட்கப்பட்டன. இது தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவுப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் சாமந்த விஜயசேகரவுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மாலின் அஜந்த பெரேராவின் உத்தரவின் பேரில், மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் அழகியவண்ண தலைமையில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கஜேந்திரன், பொலிஸ் சார்ஜன்டுகளான ரன்வெல (6158), சிசிர(44736), பொலிஸ் கன்ஸ்டபிள்களான 78448 வீரசேன(78448), ஹேரத் (34712), சுப்புன் (28752), சனத் (25523), குமார (20569), நாமல் (9599]) மற்றும் சாரதியான திசாநாயக்க (18129) ஆகியோர் அடங்கிய மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர், உடனடியாக செயல்பட்டு இந்த மரங்களை மீட்டனர். அவற்றை உடமையில் வைத்திருந்த அப் பகுதியை சேர்ந்த 30 வயதுடைய சந்தேக நபரையும் கைது செய்தனர்.

இதேவேளை மீட்கப்பட்ட மரங்களுடன் சந்தேக நபர் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.














# வடக்கு மரக்கறி லொறி மிஹிந்தலையில் எரிபொருள் பௌஸருடன் மோதி விபத்து

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அநுராதபுரம், மிஹிந்தலை பிரதேசத்தில் ஏ 9 வீதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து தம்புள்ளை நோக்கி மரக்கறிகளை ஏற்றி வந்த லொறி வீதியில் நிறுத்தப்பட்டிருந்த எரிபொருள் நிரப்பிய பௌஸருடன் மோதுண்டதில் லொறியின் உரிமையாளரும்,அதன் உதவியாளரும் படுகாயமடைந்த நிலையில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து சம்பந்தமாக மிஹிந்தலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெல்லிக்குளம் மலை உடைப்பு வழக்கு ஜூலை 4ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு






(ஹஸ்பர் ஏ.ஹலீல்)

சேனையூர் நெல்லிக்குளம் மலை உடைப்பு விவகார வழக்கு ஜுலை 04 ஆம் திகதிக்கு மூதூர் நீதிமன்றால் ஒத்தி வைக்கப்பட்டது.

மூதூர் கிழக்கு சேனையூர் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட நெல்லிக்குள மலை பிரதேசத்தில் மலை உடைப்பதால் தமக்குப் பாதிப்புள்ளதாக கல்மலை உடைக்கும் போது எதிர்ப்பு தெரிவித்த 10 பொதுமக்கள் கடந்த 11 ஆம் திகதியன்று சம்பூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு அடுத்த நாள் மூதூர் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு சொந்தப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்கள்.

இதனை தொடர்ந்து சம்பவ இடத்தை மூதூர் நீதிவான் தஸ்னீம் பௌசான் கடந்த சனிக்கிழமையன்று விஜயம் செய்து பார்வையிட்டார். அந்த வழக்கு நேற்று மூதூர் நீதிமன்றில் பதில் நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இது தொடர்பான வழக்கை மூதூர் நீதிமன்றில் சம்பூர் பொலிஸார் முன்னர் தாக்கல் செய்திருந்தனர். வழக்கில் இரு தரப்பினரும் நேற்று ஆஜராகியிருந்தனர். கைது செய்யப்பட்டு சொந்த பிணையில் விடுவிக்கப்பட்ட 10 நபர்களுக்கும் சார்பாக சட்டத்தரணிகளான பு.முகுந்தன், நா.மோகன், சிரேஷ்ட சட்டத்தரணி டாக்டர் தங்கமுத்து ஜயசிங்கம் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

வழக்கு எதிர்வரும் 4 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மூதூர் பதில் நீதிவானால் மன்றில் தெரிவிக்கப்பட்டது.



# டட்லியின் பிறந்த நாள் நிகழ்வில் சஜித்துடன் சிறி ரங்கா சந்திப்பு

இலங்கையின் இரண்டாவது பிரதமரான டட்லி சேன நாயக்கவின் 113 ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்று முன் தினம் பொரளையில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வும் பங்குபற்றினார். டட்லி சேனாநாயக்கவின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து தனது மரியாதையைச் செலுத்தினார்.

இந்ந நிகழ்வில் பங்குபற்றிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சிறிரங்கா, அச்சமயம் எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாஸவுடன் சினேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.







# சிறுபோக நெல் கொள்வனவிற்கு சலுகை வட்டி வீதத்தில் கடன்

சிறுபோக நெல் கொள்வனவிற்காக சலுகை வட்டி வீதத் தில் கடன் வழங்கப்படவுள்ளது.

2024 சிறுபோகத்திற்கான நெல் கொள்வனவிற்காக சலுகை வட்டி வீதத்தில் கடன் வழங்கும் திட்டத்தை நடை முறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 6,000 மில்லியன் ரூபா வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்படவுள்ளது.

சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள், நெல் களஞ்சிய உரிமையாளர்கள், மொத்த நெல் கொள் வனவாளர்களுக்கு இந்த க்கடன் வழங்கப்படவுள்ளது.




# தரம் ஒன்றுக்கு மாணவர்களை சேர்ப்பது தொடர்பான சுற்றறிக்கையில் திருத்தம்

முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வது தொடர்பான சுற்றறிக்கையில் திருத்தம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளில் பெறப்பட்ட அனுபவங்களுக்கு அமைய சுற்றறிக்கையில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்படி, புதிய சுற்றறிக்கைக்கு அமைவாகவே 2025 ஆம் ஆண்டில் முதலாம் தரத்திற்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

சமமாக வாய்ப்புகளை வழங்கவும், முறைகேடுகளை தவிர்க்கும் வகையிலும் சுற்றறிக்கையில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.




# வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி சம்பந்தமாக 2,155 முறைப்பாடுகள்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகளை சுற்றிவளைக்கும் நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லையில் உள்ள தலைமை அலுவலகத்திற்கு மேலதிகமாக ஹாலிஎல, இரத்தினபுரி, தங்காலை, குருணாகல் மற்றும் கண்டி அலுவலகங்களிலும் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன எனப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகள் தொடர்பில் 2,155 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

11 சட்டவிரோத வேலைவாய்ப்பு நிறுவனங்கள் மற்றும் 65 சந்தேகநபர்களும் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடியில் ஈடுபட்டுள்ள நபர்கள் அல்லது நிறுவனங்கள் தொடர்பில் பணியகத்தின் விசேட விசாரணை பிரிவின் 0112 864 241 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டெங்கு நோயாளர் எண்ணிக்கை மேல் மாகாணத்தில் உயர்கின்றது

நாட்டில் டெங்கு நோயாளர்களில் 37 வீதமானோர் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 26 ஆயிரத்து 803 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என சமூக சுகாதார நிபுணர், வைத்தியர் லஹிரு கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் பொசன் பூரணை தினத்தின் பின்னர் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



# இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் கட்டாயம் நடத்தப்பட வேண்டும்

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு



ஜனாதிபதித் தேர்தலை இந்த வருடம் கட்டாயமாக நடத்த வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க மீண்டும் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் பின்னர் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“தேர்தல் ஒன்றை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு தயாராகவே இருக்கிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் 2019 ஆம் ஆண்டு நடைபெற்றதால் இந்த ஆண்டு தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

இந்த வருடம் செப்டம்பர் 16 ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 16 ஆம் திகதிக்கும் இடையே ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான சட்ட அதிகாரம் ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ளது.

அந்த காலப்பகுதிக்கு அமைவாகத் திகதி ஒன்று நிர்ணயிக்கப்பட்டு அறிவிக்கப்படும்.”– என்றார்.

# தசையுண்ணி பக்டீரியா ஆபத்து இலங்கையில் ஏற்படவில்லை

## சுகாதார இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

“தசையுண்ணி பக்டீரியாக்கள்“ இலங்கையில் பரவும் ஆபத்து இப்போதைக்கு இல்லை என சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் பரவி வரும் இந்த பக்டீரியாவின் காரணமாக ஆயிரக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அது இலங்கையிலும் பரவும் சாத்தியங்கள் உள்ளனவா என்று நாடாளுமன்றில் நேற்று கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதில் வழங்கிய அவர், இந்த பக்டீரியாவானது ஜப்பானில் பரவி வருகின்ற போதும், அதனைக் கட்டுப்படுத்த அந்த நாட்டின் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என தெரிவித்தார்.

மேலும் இது வைரஸ் போன்று கட்டுப்படுத்த முடியாத ஒன்று அல்ல எனவும் சிகிச்சை முறைமைகள் ஊடாக இதனைக் கட்டுப்படுத்தலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

எனவே, இது பெருந்தொற்றாக மாறக்கூடிய ஆபத்து இல்லை எனவும் இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல விளக்கமளித்தார்.



# தைத்த ஆடைகள் ஏற்றுமதி இந்த ஆண்டில் அதிகரிப்பு

ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கையின் தைத்த ஆடைகள் ஏற்றுமதி, இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், 417.81 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

இதன் ஊடாக இந்த ஆண்டு இலங்கையின் தைத்த ஆடைகளின் ஏற்றுமதி மேலும் அதிகரிக்கும் என்ற நம்பிக்கை உருவாகி இருப்பதாக துறைசார்ந்த நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

கொவிட் பரவல் காலத்தில் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தைத்த ஆடைகளின் பெறுமதி கணிசமாக வீழ்ச்சியடைந்தது.

எனினும் 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரியளவான கேள்வியின் காரணமாக, மொத்த ஆடை ஏற்றுமதி 5,512.58 மில்லியன் டொலராகச் உயர்ந்தது.



பின்னர் ஆடைகளுக்கான கேள்வி சமநிலையடைந்து கடந்த 2023 ஆம் ஆண்டு 4,445.93 மில்லியன் டொலராகப் பதிவாகி இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.



# மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தார் ஜெய்சங்கர்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை, இலங்கை வந்துள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் நேற்று சந்தித்தார்.

அவரை சந்தித்ததில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன் என ஜெய்சங்கர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

“இந்தியா – இலங்கை இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பின் தற்போதைய முன்னேற்றம் குறித்து கலந்துரையாடப்பட்டது. அவரது தொடர்ச்சியான ஆதரவுக்காக எமது பாராட்டுகள்” என்றும் ஜெய்சங்கர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.





# தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்

## சிறைச்சாலை திணைக்களம் அறிவிப்பு




சிறைச்சாலை அதிகாரிகள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவார்களாயின் அவர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்க சிறைச்சாலை திணைக்களம் தீர்மானித்துள்ளது.

சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் காமினி பி.திஸாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் நீதித்துறை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்த முடியாது.

இதன்படி சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு சட்ட ரீதியான உரிமை கிடையாது எனவும் சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் காமினி பி.திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# வட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் கடும் வெப்ப அலையினால் 114 பேர் பலி



வட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் சமீப காலமாக கடும் வெப்ப அலை வீசி வருகின்றது.

குறிப்பாக பஞ்சாப், ஹரியானா, டெல்லி, உத்தர பிரதேசம், இமாச்சல பிரதேசம், உத்தரகாண்ட், பீகார், ஒடிசா மற்றும் ஜார்க்கண்ட் உள்ளிட்ட மாநிலங்களில் வெப்ப அலையின் தாக்கம் மிகத் தீவிரமாக உள்ளது.

இதற்கமைய பல இடங்களில் இயல்பு நிலையை விட 5-8 பாகை செல்சியஸ் அதிக வெப்பம் பதிவாகி உள்ளது.

இந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் ஜூன் 18 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில், இந்தியாவில் வெப்ப அலையின் தாக்கத்தால் சுமார் 114 பேர் உயிரிழந்துள்ளனர் என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# கள்ளக்குறிச்சியில் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார் விஜய்

கள்ளக்குறிச்சியில் கள்ளச் சாராயம் குடித்ததால் உடல்நிலை பாதிக்கப்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நடிகரும், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவருமான விஜய் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கும் அவர் ஆறுதல் தெரிவித்தார்.

கள்ளக்குறிச்சி கருணாபுரம் பகுதியில் கள்ளச் சாராயம் குடித்து 39 பேர் பலியான சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. கள்ளச் சாராயம் குடித்தவர்களில் பலர் வாந்தி, மயக்கம், தலைவலி மற்றும் வயிறு எரிச்சலால் பாதிக்கப்பட்டு கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனை, விழுப்புரம் அரசு மருத்துவமனை, புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை, சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தை நிலையில், நடிகரும், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவருமான விஜய் நேற்று மாலை கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். தொடர்ந்து அவர்களுக்கு ஆறுதல் கூறினார். மேலும், மருத்துவர்களிடம் பாதிக்கப்பட்டவர்களின் நிலைகள் குறித்து கேட்டறிந்தார்.

முன்னதாக, இந்த சம்பவம் தொடர்பாக நடிகர் விஜய் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டிருந்த பதிவில்,

“கள்ளக்குறிச்சி மாவட்டம், கருணாபுரம் பகுதியில் கள்ளச் சாராயம் அருந்திய 25 இற்கும் மேற்பட்டோர் காலமான செய்தி, மிகுந்த அதிர்ச்சியையும் மன வேதனையையும் அளிக்கிறது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்கள் விரைவில் முழு உடல்நலம் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்



றேன்.

கடந்த ஆண்டு இதே நிகழ்வு காரணமாகப் பல உயிர்களை இழந்த துயரத்தில் இருந்து இன்னும் முழுமையாக மீளாத நிலையில், மீண்டும் இப்படியொரு சம்பவம் நிகழ்ந்திருப்பது, அரசு நிர்வாகத்தின் அலட்சியத்தையே காட்டுகிறது. இது போன்ற சம்பவங்கள் நிகழாத வண்ணம், இனிமேலாவது தமிழக அரசு கடுமையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு தடுக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்திருந்தார்.

# அரவிந்த் கேஜ்ரிவாலுக்கு டில்லி நீதிமன்றம் பிணை

மதுபான கொள்கை ஊழல்வழக்கில், டில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலுக்கு பிணை வழங்கி டில்லி சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

டில்லி மதுபானக் கொள்கை ஊழல் தொடர்புடைய சட்டவிரோத பணப் பரிவர்த்தனை வழக்கில் முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலை அமலாக்கத் துறை கடந்த மார்ச் 21 ஆம் திகதி கைது செய்தது. கடந்த ஏப்ரல் 1 ஆம் திகதி டில்லி திஹார் சிறையில் கேஜ்ரிவால் அடைக்கப்பட்டார்.

இதையடுத்து மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவதற்காக கேஜ்ரிவாலுக்கு உச்ச நீதிமன்றம் கடந்த




மாதம் 10 ஆம் திகதி இடைக்கால பிணை வழங்கியது. ஜூன் 2 ஆம் திகதி அவரை சிறைக்கு திரும்ப உத்தரவிட்டது.

அதன்பின், மருத்துவ பரிசோதனைகளுக்காக இடைக்கால பிணை நீட்டிக்க வேண்டும் என கேஜ்ரிவால் மனு தாக்கல் செய்தார். இதற்கு அமலாக்கத் துறை கடும் எதிர்ப்பு தெரிவித்ததால் இதன் விசாரணையை உச்ச நீதிமன்றம் ஒத்திவைத்தது. இதனால் கேஜ்ரிவால் திஹார் சிறையில் சரணடைய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதன்பின் திஹார் சிறைக்கு சென்று கேஜ்ரிவால் ஆஜரானார்.

இந்த நிலையில், சில்லி சிறப்பு நீதிமன்றம் நேற்று டில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலுக்கு பிணை வழங்கி உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து, அவர் இன்று சிறையில் இருந்து விடுவிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.



# ஹஜ் யாத்திரையில் பலியானோர் எண்ணிக்கை மேலும் அதிகரித்தது

இந்த வருடம் ஹஜ் யாத்திரையின்போது கடுமையான வெப்பம் தொடர்பான பிரச்சினைகளால் உயிரிழந்த யாத்திரிகர்களின் எண்ணிக்கை ஆயிரமாக அதிகரித்துள்ளதாக அரபு நாடுகளின் இராஜதந்திரிகள் அறிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 68 இந்தியர்களும், 528 எகிப்தியர்களும், 60 ஜோர்தானியர்களும் அடங்குகின்றனர் என இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஹஜ் யாத்திரிகர்கள் வெப்பத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்காக சிகிச்சை பெற்று வருவதாக சவுதி அரேபிய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ஹஜ் யாத்திரிகர்கள் பகல் வேளைகளில் நீண்ட நேரம் வெயிலில் இருப்பதன் காரணமாக அதிகளவானோர் பாதிக்கப்படுகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புடினுக்கு வடகொரியாவின் தலைவர் ஒரு சோடி நாய்களை பரிசளித்தார்



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு வடகொரியாவின் தலைவர் கிம் ஜொங் உன் ஒரு சோடி பங்சன் நாய்களை பரிசாக வழங்கியுள்ளார்.

பியோங்யாங்கில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, இரு தலைவர்களும் பல்வேறு பரிசுகளை பரிமாறிக் கொண்டுள்ளனர்.

விளாடிமிர் புடின் 2000 ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன்முறையாக வடகொரியாவுக்குச் சென்றுள்ள நிலையில் அவரை கிம் ஜொங் உன் பிரமாண்டமாக வரவேற்றுள்ளார்.

இதன்போது, வடகொரியாவின் பொருளாதாரம், பாதுகாப்பு மற்றும் அரசியல் விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்துள்ளனர்.

இந்த நிலையில், புடினுக்கு பங்சன் நாய்கள் பரிசாக வழங்கப்பட்டுள்ளன.

கொரிய தீபகற்பத்தின் வடக்கே உள்ள மலைப்பகுதிகளில் பங்சன் இன நாய்கள் வாழ்கின்றன. அவை உறைபனி எதிர்ப்பு தோல் கொண்ட நாய்கள்.

அவைகளால் பாரிய விலங்குகளை கூட தாக்க முடியும். கொரியாவில் அவை வேட்டை நாய்களாக பயன்படுத்தப்படுகின்றன.

புடின் இந்த பயணத்தில் வட கொரியா மற்றும் வியட்நாம் ஆகிய இரண்டு ஆசிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வணிக பொருள்களை பாதுகாத்த படை வீரர்கள் மீது வான்தாக்குதல்

### 10 பேர் உயிரிழப்பு

இஸ்ரேல் இராணுவம் வணிக பொருள்களை பாதுகாத்து வந்த பாதுகாப்புப்படை வீரர்கள் மீது வான்தாக்குதல் நடத்தியதில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் உடல்கள் மற்றும் காயம் அடைந்தோர் ஐரோப்பிய காசா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர் என மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தாக்குதல் தொடர்பாக இஸ்ரேல் இராணுவம் இதுவரை எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை.

சமீபத்தில் மேற்கு கரையில் இருந்து காசா முனைக்கு வணிக பொருட்கள் கொண்டு செல்ல இஸ்ரேல் அதிகாரிகள் அனுமதி அளித்திருந்திருந்தனர். இதனால் பாதுகாப்புப்படை வீரர்கள் பாதுகாப்புடன் வணிக பொருட்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள காசா முனைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

கடந்த திங்கள் கிழமை இதுபோன்று வணிக பொருள்கள் கொண்டு சென்றபோது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர். இந்த நிலையில் 2 ஆவது முறையாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.



# இன்றைய ராசி பலன்கள் - 21.06.2024




வாழ்வில் முன்னேறுவதற்கு உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். பொறுமை மற்றும் அமைதி மேற் கொண்டால் எல்லாம் சரியாகி விடும். இன்று சமாளிப்பதில் சற்று சிரமம் காணப்படும்.

பிறருடன் பழகும்போது பொறுமை அவசியம். அமைதி யுடன் நடந்து கொண்டால் அவர்களின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணை விரும்பும் வகையில் நடந்து கொள் வீர்கள்.ஒருவருக்கொருவர் அனுசரனையாக நடந்து கொண்டால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இல்லாவிடினும் கவலை வேண்டாம். எதிரபாராத பண வரவைக் கொண்டு உங்கள் செலவை சமாளிப்பீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்துக்காக சிறிது பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.தொண்டை வலி ஏற்படாமல் இருக்க குளிர்ச்சியான உணவுகளை தவிர்த்திடுங்கள்.




உங்களிடம் காணப்படும் ஆர்வம் காரணமாக நீங்கள் இன்று செயல்களை விரைந்து முடிப்பீர்கள். இன்று நீங்கள் எடுக்கும் முடிவுகள் நீண்ட காலப் பயன் தருவனவாக இருக்கும்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்களிடம் சிறப்பு தகுதி காணப்படும் அதனை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

நீங்கள் இருவரும் மகிழ்வுடன் காணப்படுவீர்கள். உங்களின் உறவு சிறப்பாக இருக்கும்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். இதனால் மகிழ்ச்சி ஏற் படும்.

இன்று ஆற்றலும் உற்சாகமும் நிறைந்து காணப்படும். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பலன்கள் கலந்து காணப்படும். அமைதியாக இருந்தால் கவனமாக செயலாற்றலாம். மகிழ்ச்சிக்கான மந் திரம் இதுவே.

உங்கள் பணிகளை முன்னுரிமைப் படுத்தி நன்கு திட்டமிட வேண்டும்.இன்று பணிகள் சிறிது அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ளுங்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி நில வும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். செலவும் காணப்படும் என்றாலும் அது பயனுள்ளதாக இருக்கும்.

இன்று நீங்கள் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும். தேவையின்றி பதற்றப்பட வேண்டாம். அது உங்கள் ஆரோக்கியத்தை கெடுக் கும்.




நம்பிக்கையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.இதனால் எல்லா விதமான பிரச்சினைகளையும் சமாளிக் கலாம். உங்கள் மனதை அமைதியாக வைத்திருங்கள்.

இன்று பணிகள் அதிகமாக இருப்ப தாக உணர்வீர்கள். பணிகளை முன்னுரிமைப் படுத்தி அதன்படி ஆற்றுங்கள். இன்று நேரத்தோடு செயல்பட வேண்டியது அவசியம்.

நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். உங்கள் துணையிடம் பொறுமையாக நடந்து கொள்ள வேண்டும். இதனால் உறவில் நல்லிணக்கம் மேம்படும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக செலவு செய்ய நேரும். என்றாலும் உங்கள் தேவைகளை சமாளிக்கும் வகையில் உங்கள் பணப்புழக்கம் காணப்படும்.

இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். பதற்றப்படாமலிருந்தால் ஆரோக்கி யம் சிறப்பாக இருக்கும்.




நேர்மறை எண்ணம் மற்றும் நட்பான அணுகுமுறையை மேற்கொள்ளுங்கள். இதனால் வெற்றியும் நன்மதிப்பும் கிடைக்கும். எதிர்மறை எண்ணத்தை தவிர்த்திடுங்கள்.

உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டும். கவனமின்றி செயல்பட்டால் பணியும் தரம் குறையும். அதன் விளைவாக உங்கள் நன்மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையின் அனுசரணை கிடைப்பது இயலாது என்பதனால் நீங்கள் இன்று உணர்ச்சி வசப்படா மல் இருக்க வேண்டும். யதார்த்தமான உங்கள் அணுகுமுறை உங்கள் துணையை உங்கள் பக்கம் ஈர்க்கும்.

நிதிநிலைமை சற்று மந்தமாக இருக்கும். உங்கள் செலவுகளை குறைக்க வேண்டும். இதன் மூலம் நித-யின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த முடியும்.




இன்று மிகுந்த ஆற்றலுடன் காணப் படுவீர்கள். பயனுள்ள செயல்களுக்கு அதனை பயன்படுத்துங்கள்.இன்று சௌகரியமாக இருப்பீர்கள்.

உங்கள் பணி இன்று தரமானதாக இருக்கும். உங்களிடம் மறைந்திருக்கும் ஆற்றல் வெளிப்பட்டு அனைவரின் பாராட்டையும் பெறும்.

சிறந்த தகவல் தொடர்பால் உங்கள் துணை மகிழ்ச்சியடைவார். உங்கள் இருவருக்குமிடையே மகிழ்ச்சியான இனிமையான தருணங்கள் காணப் படும்.

இன்று கடன்கள் பெற்று உங்கள் பணத் தேவை களை சமாளிப்பீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றல் உய ரும்.

இன்று திடமான ஸ்திரமான ஆரோக்கியம் காணப் படும்.




இன்று மிகவும் சிறப்பான நாள். உங்கள் பேச்சில் தெளிவு காணப்படும். உங்கள் பேச்சாற்றல் மூலம் சாதிப் பீர்கள்.

உங்களைச் சுற்றி காணப்படும் குழப்பம் காரணமாக பணியில் கவனம் செலுத்த இயலாது. சகபணியாளர்களுடன் பொறுமையாக பழக வேண்டும். பணியை குறித்தநேரத்தில் முடிப்பதற்கு முன்னுரிமை அளியுங்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உங்களிடமிருந்து கிடைக்கும் ஆதரவால் உங்கள் துணை மகிழ்ச்சியடைவார்.

நிதிநிலைமையை சமாளிப்பது இன்று கடினமாக இருக்கும். செலவுகளை நிர்வகிக்க தெரிந்து கொண்டு அதிகம் செலவழிக்காமல் இருக்க வேண் டும்.




இன்று சிறப்பாக யோசித்து செயல் பட வேண்டியது அவசியம். தேவையற்ற எண்ணங்களை மனதில் கொள்ளா தீர்கள்.

பணியிடத்தில் இன்று கூடுதல் பொறுப்புகள் காணப்படும். உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்வதன் மூ ல ம . அமைதி காணலாம்.

இன்று காதலில் அனைத்தும் சுமூகமாக நடக் கும். உங்கள் துணை உங்களிடம் புரிந்துணர்வுடன் இருப்பார். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்காது. என்றாலும் உங்களிடம் இருக்கும் பணத்தைக் கொண்டு இன்றைய தினத்தை சமாளிக்கலாம்.

உணர்ச்சிவசப்படுதலும் பாதுகாப்பற்ற உணர்வும் தவிர்க்க வேண்டும். அது உங்கள் ஆரோக்கியத்தை கெடுக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 21.06.2024




ஆரம்பத்தில் சில தடைகள் காணப்படும். உங்களின் தைரியத்தைக் கொண்டு சமாளிப்பீர்கள். கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் அவசியம். நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

இன்று கவனமாக பணியாற்ற வேண்டும். தேவையற்ற சஞ்சலங்களுக்கு இடம் கொடுக்காதீர்கள்.சிறப்பாக செயலாற்றுங்கள்.

தன்னுடைய விருப்பப்படி நீங்கள் நடக்க வேண்டும் என்று உங்கள் துணையின் எதிர்பார்ப்பு காணப்படும். அதற்கு முயன்றால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

இன்று அதிக பணம் காணப்படாது. உங்களிடம் இருக்கும் பணம் தேவையை விட அதிகமாக இருக்கும்.

இன்று முன்னெச்சரிக்கையாக உங்கள் கண்களுக்கும் பல்லிற்கும் சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.




இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். இதனால் பதட்டம் காணப்பட்டாலும் உங்களிடம் மகிழ்ச்சியும் காணப்படும். விருப்பமான வெளியிடங்களுக்கு செல்வது ஆறுதலைத் தரும்.

நம்பிக்கையுடன் செயல்பட்டால் எந்த சவால்களையும் எதிர் கொள்ளும் மன நிலை உருவாகும். அது வெற்றிக்கு வழி வகுக்கும்.

உங்கள் துணையின் உதவியுடன் விரைந்து முடிவெடுக்க விரும்புவீர்கள். நல்ல தொடர்பு காணப்படும். முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் போதுமானதாக இருக்கும். பூர்வீகச் சொத்து அல்லது எதிர்பாராத பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இசை கேட்டல் மற்றும் பிரார்த்தனை நல்ல மனநிலையை அளிக்கும்.




இன்று அனைத்தும் சிறப்பாக நடக்கும். வாழ்வில் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பாராத விதமாக இன்று உங்களுக்கு பண வரவு அதிகமாக இருக்கும்.

பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். ஊக்கத்தொகை கிடைக்க வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையேயான பிணைப்பு முன்பிருந்ததை விட இப்பொழுது அதிகமாக இருக்கும்.

இன்று நிதிநிலைமை சுதந்திரமாக காணப்படும். உங்களின் பணம் சம்பாதிக்கும் திறன் இன்று அதிகரித்தும் பக்குவப்பட்ட நிலையிலும் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் முன்னேற்றத்துக்காக பாடுபடுவீர்கள். இது வெற்றியை அளிக்கும். பிரார்த்தனை மூலம் மன அமைதி பெறுவீர்கள்.

இன்று அதிர்ஷ்டம் குறைவாக காணப்படும். பணியில் கவனம் செலுத்தினால் நல்ல பலன்களைக் கொடுக்கும்.

உங்கள் உறவின் தரத்தை மேம்படுத்த முயற்சி செய்ய வேண்டும். வேறுபாடுகளைக் களைந்து புரிந்துணர்வுடன் செயல்பட்டால் நல்லுறவை ஏற்படுத்த முடியும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். குறைவாக செல்வழிக்க வேண்டும். சேமிப்பை அதிகரிக்க வேண்டும்.




